மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சட்டமன்றத் (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு சட்டமன்றத் (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1983) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 12-2-1983 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

II, பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

142. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர் வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளின் முதல் தொகுப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 25—7—1980 ஆம் தேதியிடப் பெற்ற, பணியாளரமைப்பு-நிர்வாகச் (பணியாளரமைப்பு-M) சீர் திருத்தத் துறையின் 775 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

143. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான எட்டாவது அண்டறிக்கை (ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

1983 பிப்ரவரி 11]

144. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1981-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [ஆங்கிலம்] 1056-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

145. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1979-ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [ஆங்கிலம்] 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

146. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1980-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவி கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்—

எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS